# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

**TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL**

# அரையாண்டுத் தேர்வு

# 2014 - 2015

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 3

சுட்டெண்:............................................................ நேரம்: 90 மணித்துளிகள்

1) **பொருத்தமான விடையைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.**

**எ - கா**

தமிழில் பல தொன்மையான நூல்கள் உள்ளன.
(நூல்கள், படங்கள், எழுத்துகள்)

1. தமிழரது வீரத்தைப் பற்றிக் கூறும் நூல் ____________________.
(மணிமேகலை, புறநானூறு, திருக்குறள்)

2. முற்காலத்தில் மக்கள் நாடகங்களை ____________________ பாடி ஆடி நடித்தனர்.
(கலையோடு, கவியோடு, இசையோடு)

3. எவருடனும் பணிவுடன் பழகுவது ____________________ .
(பணிவன்பு, நேர்மை, வீரம்)

4. புகழ் என்பதன் எதிர்ச் சொல் ____________________ .
(இகழ், பொய், பிழை)

5. இனியன் பேருந்தில் கண்டெடுத்த பொருள் ______________ .
(நூல், பந்து, பை)

6. இசையரசி ____________________ பூ அழகாக இருந்தது .
(கொய்த, எழுதிய, படித்த)

7. கோடை காலத்தில் ______________________ பள்ளி விடுமுறை விடப்படும்.
(குறுகிய , சிறிய, நீண்ட)

8. கலைச்செல்வன் பிறந்தநாளை நண்பர்களுடன் ______________________ விரும்பினான்.
(கொண்டாட, பாட, எழுத)

9. நரி 'ஊ ஊ' என்று ஊளையிட்டுக் கொண்டு ஓடியதைக் கண்ட சிறுமி ______________________ என்று சிரித்தாள்.
(நறநற, கலகல, படபட)

10. காட்டில் அதியமான் ஒரு ________________ மரத்தைக் கண்டான்.
(மா , பனை, நெல்லி)

11. இன்று காலை நான் உணவு உண்டேன்.
நாளை காலை நான் உணவு ______________________ .
(உண்டேன், உண்கின்றேன், உண்பேன்)

12. பாடற்போட்டி என்பதைப் பிரித்து எழுதினால்
______________________
(பாடல் + போட்டி, பாடற் + போட்டி, பாடல்ப் + போட்டி)

13. முகிலன், ஒரு புதியவர் அப்பாவுடன் இருந்து ______________________ அருந்துவதைக் கண்டான்.
(தேனீர், தேன்நீர், தேநீர்)

14. இலங்கையில் உள்ள இடங்களில் ஒன்று

____________________ .

(யாழ்ப்பாணம், சென்னை, மதுரை)

15. பண்டார வன்னியன் ____________________ போர் புரிந்தான்.

(இலங்கையருடன், ஆங்கிலேயருடன், போர்த்துக்கேயருடன்)

16. கற்பதைப் பிழை இல்லாமல் கற்கவேண்டும் எனக்கூறுவது

____________________ .

(நாலடியார், புறநானூறு, திருக்குறள்)

17. பனை மரம் மிகவும் ____________________ இருக்கும்.

(கட்டையாக, உயரமாக, சிறிதாக)

18. பறவைகள் கூட்டங் கூட்டமாகப் ____________________ .

(நடந்தன, பறந்தன, ஓடின)

19. கூத்துப் ____________________ கேட்க இனிமையாக இருக்கும்.

(ஆட்டங்கள், நடிப்புகள், பாடல்கள்)

20. 80 என்ற எண்ணை எழுத்தில் எழுதினால் ____________________ .

(என்பது , எண்பது, எண்ப்பது)

புள்ளிகள் 20

## 2) கீறிட்ட இடத்தை மிகப் பொருத்தமான சொல்லால் நிரப்புக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பளபள | கீச்கீச் | ~~கொழுகொழு~~ | நறநற | கலீர்கலீர் | மடமட |

**எ - கா**

பனிக்கரடி பார்க்கக் <u>கொழுகொழு</u> என்று இருந்தது.

1. மாமா சினத்தால் பற்களை __________ என்று கடித்தார்.

2. தங்கை பழச்சாற்றை __________ என்று குடித்தாள்.

3. அம்மாவின் சேலைக் கரை __________ என்று மின்னியது.

4. என் தங்கை நடனமாடிய பொழுது அவளின் காற்சலங்கை __________ என ஒலித்தது.

5. பறவைக் குஞ்சு கூட்டில் இருந்து __________ என்று கத்தியது.

புள்ளிகள் 05

## 3) பார்த்து உறுப்பமைய எழுதுக.

பூக்கள் பல வண்ண நிறங்களில் பூத்திருக்கும்.

______________________________

புள்ளிகள் 03

**4) கீறிட்ட இடங்களில் மிகப் பொருத்தமான முடிக்கும் சொற்களை எழுதி வாக்கியங்களை (சொல்லியங்களை) நிறைவு செய்க.**

**எ - கா**

இனியனுக்கு ஆசிரியர் சொன்னது நினைவுக்கு <u>வந்தது</u> .

1. கலையரசன் பிறந்த நாள் அழைப்பிதழ் ஒன்றை ______________________ .

2. எனது சின்னம்மா நாளை இத்தாலியில் இருந்து ______________________ .

3. நான் மாவீரர் நாளுக்கு அப்பாவுடன் ______________________ .

4. சிலப்பதிகாரம் தமிழரின் பண்பாட்டைப் பற்றிக் ______________________ .

5. நான் இப்பொழுது தமிழ்மொழித் தேர்வு எழுதிக் கொண்டு ______________________ .

6. அம்மாவால் முற்றத்தில் கோலம் ______________________ .

புள்ளிகள் 12

**5) பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.**

**எ - கா**

எனது நண்பர்களுடன் நான் மகிழ்ச்சியாக விளையாடுவேன்
(கவலையாக / மகிழ்ச்சியாக)

1. நாம் மற்றவருக்கு ______________ செய்ய வேண்டும்.
(நன்மை / தீமை)

2. நாங்கள் ______________ ச் சேர்ந்து வாழ்வோம்.
(வேற்றுமையாக / ஒற்றுமையாக)

3. பூம்பனியைத் தொடும் போது ______________ இருந்தது.
(குளிராக / சூடாக)

4. நாங்கள் தேர்வுக்கு ______________ ப் படிக்க வேண்டும்.
(நன்றாக / குறைவாக)

5. யானை விலங்குகளில் ______________ .
(சிறியது / பெரியது)

புள்ளிகள் 05

6) **கட்டங்களில் உள்ள சொற்களைக் கண்டறிந்து பொருத்தமாக எழுதுக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பொ | ங் | க | ல் | சோ | று |
| | ப | ஊ | ஞ் | ச | ல் |
| இ | ட் | ட | லி | ச | ப |
| ப | ட | தோ | பொ | று | ம் |
| ந் | ம் | சை | ம் | க் | ப |
| து | கூ | ழ் | மை | கி | ர |
| இ | டி | ய | ப் | ப | ம் |

| **உணவுகள்** | **விளையாட்டுப்பொருட்கள்** |
|---|---|
| எ - கா | |
| இட்டலி | பட்டம் |
| ________ | ________ |
| ________ | ________ |
| ________ | ________ |
| ________ | ________ |
| ________ | ________ |

புள்ளிகள் 10

7) மிகப்பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கீழே | சறுக்கி | ~~விளையாட்டுப்~~ | ஆடி | நண்பர்களுக்கு | சேர்ந்து |

கபிலன் ஒருநாள் நண்பர்களுடன் விளையாட்டுப் பூங்காவிற்குச் சென்றான். நண்பர்களுடன் ______________ பந்து அடித்து விளையாடினான். பின்னர் அங்கிருந்த ஊஞ்சலில் ______________ மகிழ்ந்தான். தனது நண்பர்கள் சறுக்கியில் சறுக்கி விளையாடுவதைக் கண்டான். தானும் ______________ விளையாட விரும்பினான். சறுக்கியில் ஏறும் போது ______________ விழுந்து விட்டான். நண்பர்கள் ஓடிப் போய்க் கபிலனைத் தூக்கினார்கள். கபிலன் ______________ நன்றி கூறினான்.

புள்ளிகள் 10

8) **மாறி இருக்கும் சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியமாக (சொல்லியமாக) எழுதுக.**

**எ - கா**

தருகின்றது / பயன்களைத் / பல / பனை

பனை பல பயன்களைத் தருகின்றது ______________________ .

1. நடைபெற்றது / பேச்சுப் / பள்ளியில் / எங்கள் / போட்டி

______________________ .

2. பொதுமறை / கூறுவர் / என்றும் / திருக்குறளைப்

______________________ .

3. வீட்டுக்குச் / சிறுமி / பாட்டியின் / சென்றாள்

______________________ .

4. மிகவும் / மொழி / தொன்மையான / தமிழ்

______________________ .

5. வந்தார் / ஒருவர் / புதியவர் / வீட்டுக்கு

______________________ .

| புள்ளிகள் 10 |
|---|

**9) பந்தியை** வாசித்து, **வினாக்களுக்கு முழுவிடை தருக.**

அன்று சனிக்கிழமை பள்ளி விடுமுறைநாள். தமிழினி சாரளத்தைத் திறந்து வெளியே பார்த்தாள். மாலை நேரம் நல்ல மழை பெய்து கொண்டிருந்தது. முற்றத்தில் வெள்ளம் நின்றது. தமிழினி தனது தம்பி சேந்தனை அழைத்துக் கொண்டு அம்மாவிற்குத் தெரியாமல் வெளியே வந்தாள். இருவரும் தாளில் கப்பல் செய்து வெள்ளத்தில் விட்டு விளையாடினர். மகிழ்ச்சியுடன் மழையில் நனைந்தனர். அம்மாவிற்குத் தெரியாமல் நனைந்த உடைகளை மாற்றினர். அடுத்த நாள் இருவருக்கும் காய்ச்சல் வந்தது. இருவராலும் பள்ளி செல்ல முடியவில்லை. அம்மாவிற்குத் தெரியாமல் எதுவும் செய்யக்கூடாது என இருவரும் நினைத்தனர். நடந்ததை அம்மாவிடம் கூறி மன்னிப்புக் கேட்டனர்.

**எ - கா**

சாளரத்தைத் திறந்து வெளியே பார்த்தது யார் ?

சாளரத்தைத் திறந்து வெளியே பார்த்தது தமிழினி ________________ .

1. எந்நேரம் மழை பெய்தது?

________________________________________ .

2. தமிழினியின் தம்பியின் பெயர் என்ன?

________________________________________ .

3. இருவரும் யாருக்குத் தெரியாமல் வெளியே வந்தனர்?

________________________________________ .

4. தமிழினியும் தம்பியும் என்ன விளையாடினர்?


________________________________________ .

5. தமிழினியும் தம்பியும் என்ன நினைத்தனர்?

________________________________________ .

புள்ளிகள் 10

10. படத்தைப் பார்த்து ஐந்து வாக்கியங்கள் (சொல்லியங்கள்) எழுதுக.



1. ______________________________

______________________________

2. ______________________________

______________________________

3. ______________________________

______________________________

4. ______________________________

______________________________

5. ______________________________

______________________________

புள்ளிகள் 15